சுபமஸ்து.

தமிழகம்.

வால்யூம். 1 | 1905௵ ஜூன்௴ | நம்பர். 6.

சிறுவர் சிறுமிகளுக்கான பக்கம்.

மகாதேவ கோவிந்த ரநதேவ்.

இவர் ஓர் பெயர் பெற்ற இராஜதந்திரி. சுதேசாபிமானம் மிகவும் படைத்தவர். இவர் பெயரைக்கேட்ட மாத்திரத்தில் யாவருக்கும் இவரிடத்தில் அன்பு பெருகும். இவர் வரலாற்றைச்சற்று விசாரிப்போம்.

இவர் 1842௵ ஜனவரி௴ 18௳ நாசிகை ஜில்லாவில் நிபத் என்றவிடத்தில் பிறந்தவர். இவருடைய தகப்பனார் நிபத்துக்கு மம்லத்தாராக (தாசில்தார்) இருந்த ஒரு பிரபுவினிடத்தில் பிரதான குமாஸ்தா வேலைபார்த்து வந்தார். இவர் கோலாபூரில் பாலியத்தில் படிக்கவேண்டியவைகளை யெல்லாம் படித்தபிறகு பம்பாய் நகரிலுள்ள எல்பின்ஸ்டோன் காலேஜில் மாணாக்கராகச்சேர்ந்தார். இவருக்கு அப்போது வயசு பதினாறு. அவ்விடத்தில் படித்து, 1862௵ல் பீ. ஏ. பரிக்ஷையிலும் 1865௵ எம். ஏ. பரிக்ஷையிலும் தேறி, 1866௵ல் மிகுந்த கியாதியோடு எல். எல். பீ. என்ற சிறந்த பட்டத்தையும் பெற்றார். 1876

ஞூல் வைக்கீல் வேலையில் அமர்ந்தார். இவர் கல்வித்திறமை மிகச் சிறந்தது. ஆதலால், இவருக்கு "பீ. ஏ. பரிக்ஷையில் தேறின வித்தியார்த்திகளுக்குப் பூஷணமானவர்" என்று பொருள்கொண்ட ஒரு பட்டங் கிடைத்தது.

ரா:தேவ் கொஞ்சகாலம் பூனாவில் மஹாராஷ்டிர துவிபாஷிகராக விருந்தார். சிலகாலம் அக்கல்கோட் என்றவூரில் கார்வாரி ஆனார். பிறகு நான்கு வருஷகாலம் எலிபின்ஸ்டோன் காலேஜில் ஆங்கிலம் கற்பிக்கும் சிறந்த பண்டிதராக இருந்தார். 1873ஞூல் காயமான சப் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டார். 1884ஞூ முதல் பூனாவில் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜியாக அமர்ந்தார். அதன் பிறகு வியவசாயிகளின் சகாயத்தைக் கோரிய சட்டத்தின்படி அவர் ஒரு ஸ்பெஷல் ஜட்ஜியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு பம்பாய் நகரில் ஹைகோர்ட் ஜட்ஜியா: நியமிக்கலானார். இந்த வேலையில் அவருடைய வல்லமை முற்றிலும் விளங்கியது. வழக்குகளை எல்லாருக்கும் திருப்தியுண்டாகும்படி தீர்த்தார். இதைக்கண்டு ஹைகோர்ட்டார் இவர்மீது புகழ்மாரி பொழிந்தார்கள். காலஞ்சென்ற ஸர். டி. மாதவராவ் இவருக்கு மாசமொன்றுக்கு இரண்டாயிர ரூபாய் கொடுத்து பரோடா நாட்டுக்குப் பிரதான ஜட்ஜியாய் நியமிக்க இருந்தார். காலஞ்சென்ற மகாராஜா துக்காஜிராவ் ஹோல்கார் அவர்களும் மாசமொன்றுக்கு மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுத்துத்தனது நாடான இந்தூருக்குத் திவானாக இவரை நியமிக்கக்கருதினார். ஆனாலும், இவர் பலகாரணங்களைக்கருதி இந்த இரண்டு வேலைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. 1885ஞூத்திலும் இவர் லார்டு ரீ என்பவரால் ஆலோசனை சபையில் ஒரு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே மாதிரி லார்டு ஹாரிஸ் துரையவர்களும் இவரை 1893ஞூத்தில் ஆலோசனை சபையில் சேர்த்துக்கொண்டார். இராஜாங்கத்துக்கு இவர் செய்த சிறந்த காரியங்களுக்காக 1887ஞூத்தில் இவருக்கு "கம்பானியன் ஆப் தி இந்தியன் எம்பயர்" என்ற சிறந்த பட்டங் கிடைத்தது. "இந்தியா இராஜாங்கத்துக்குத் துணைவன்," என்பதே இதன் பொருள்.

1893ஞூ ஆகஸ்டுமீ ஹைகோர்ட்டு ஜட்ஜி ஆகவிருந்த திலாங்கு இறந்துபோகவே, அவருடைய ஸ்தானத்தில் இவ

ரை நியமிக்கலாமென்று லார்டு ஹாரிஸ் சிபார்சு செய்தார். அப்போது விக்டோரியா மகா ராணியார் அவர்கள் ரநதேவரைப் பம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜியாக நியமித்தார். இராஜாங்கத்தாருக்கும் ஜனங்களுக்கும் முற்றிலும் திருப்தியுண்டாகத் தனது கடமைகளைச் செய்தார். இராஜாங்கச் சீர்திருத்த விஷயமாக நடைபெற்றுவருஞ் சங்கத்தில் முக்கிய நிலையாக விருந்து உழைத்தார். ஜனசாரச் சீர்திருத்த விஷயங்களிலும் கண்ணுங்கருத்துமாக இருந்து நியாயம் பகர்ந்து வந்தார். நாடு க்ஷேமமடைய வேண்டுமென்னுங் கருத்தே அவர் வாழ்நாள்முழுவதும் அவர் மனதில் ஸ்திரமாய்க் குடிகொண்டிருந்தது. இந்தியாவின் யோகக்ஷேமத்திற்கென்றே தனது காலத்தையுஞ் சக்தியையும் செலவழித்தார். இந்தியாவே கடவுளுக்குக்கண்ணான நாடு என்று விவகரித்தார். இவருடைய சரித்திரம் மிகவும் புத்தி கற்பிக்கக் கூடியதாயிருக்கிறபடியால், இந்தியாவிலுள்ள சிறுவர்கள் எல்லாரும் இவர் வரலாற்றைச் செம்மையாகப் படிக்கத்தகும். மஹாராஷ்டிரர்களின் சரித்திரத்தை மூன்று சம்புடங்களில் எழுதவெண்ணி ஆரம்பித்தார். முதலாவது சம்புடத்தை அச்சேற்றினவுடனே நமது துர்ப்பாக்கியவசத்தால் இறந்துபோய்விட்டார். இந்த மஹாராஷ்டிர சரித்திரத்தின் முதலாவது சம்புடம் இந்துதேச சரித்திரத்திற்கு ஓர் முக்கியமான பாகம்.

ரநதேவ் "உலக நன்மைக்காக உழைத்துக்கொண்டே சாவதுமேன்மை" என்று சொல்லி வந்தார். அப்படியே யவரும் பொதுநன்மைக்காக உழைத்தே காலஞ்சென்றார். 1901ளு ஜனவரிமீ 16உ வழக்கப்பிரகாரம் ஹைகோர்ட்டிலிருந்து திரும்பிவந்தார். கொஞ்சங் காலாற நடந்து வீட்டிற்குவந்து போஜனம் செய்து பேட்டிகாண வந்தவர்களோடு சற்றுப்பேசியிருந்துவிட்டுப் படுக்கைக்குச் சென்றார். சற்றுநேரம் பொறுத்து மார்பிலே கடுமையான வலியொன்றுண்டானதாக முறையிட்டார். அந்த வலி நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்தது. அவருடைய வயித்தியரான ஸர். பாலசந்திரர் என்பவர் வந்துசேருவதற்கு முன்னமே பத்தரைமணி சுமாருக்குத் தேகவியோகமடைந்தார். அவர் இறந்ததற்கு இந்தியா முழுவதும் அழுதது; ஒவ்வொரு மாகாணத்திலும் "இவர் நம்முடையவர், இவர் நம்முடையவர்" என்று கொண்டாடாதவர்களில்லை.

ரநதேவ் வித்தியார்த்திகளில் மிகச் சிறந்தவர், ஒப்பற்ற கல்வித்திறமையுள்ளவர், மிகுந்த யோசனை சக்தியுடையவர், ஆழக் கற்றுணர்ந்த ஞானி, உண்மையான சுதேசாபிமானி, காரியங்களை நிறைவேற்றுவதில் மிகுந்த அநுபோகஸ்தர்.

ஜனவரிமீ 22வ கவர்ன்மெண்டார் செய்த தீர்மானத்தின் முடிவு பின்வருமாறு:—ரநதேவ் இறக்கவே, இத்தேசம் கீர்த்தியும், இராஜவிசுவாசமுமுள்ள உத்தியோகஸ்தனை இழந்தது. கல்வித்திறமையும், உபயகட்சிகளின் நியாயங்களை ஆராய்ந்தறிந்து பட்சபாதமில்லாமல் தீர்ப்புச் செய்யும் வன்மையும், ஆண்மைக்குணமும் இவரிடத்திலேயே மிகவும் காணப்பட்டன.

பத்திராதிபர்.

பூகம்பமும் எரிமலையும்.

சென்ற மாதத்துச் சஞ்சிகையில், பூகம்பம் நேரிட்டால் அது பூமியின் பரப்பை அதிகப்படுத்துமென்று காட்டச்சமீபத்தில் உண்டான "நவிமா" என்ற தீவைத்திருஷ்டாந்தமாகக் கூறினேம். இந்தச் சஞ்சிகையில் நிலவழிவு உண்டாகுமென்று காட்டச் சென்ற எப்ரல் மாதம் வட இந்தியாவில் உண்டான பூகம்பத்தினால் நேர்ந்த விபத்தை வர்ணித்துக் கூறுவோம்.

சென்ற எப்ரல்மீ 4வ செவ்வாய்க்கிழமை யன்று ஓர் பூகம்ப அதிர்ச்சியானது இவ்விந்துதேசத்தில் பலவிடங்களில் ஏககாலத்தில் நேரிட்டது. இந்தியாவின் வடக்கிலிருக்கிற காஸ்மீரராஜ்யத்தின் பிரதானபட்டணமாகிய ஸ்ரீநகரிலும் அதற்கு வடக்கிலிருக்கிற குல்மாண்டே, ஸாக்கல் முதலிய விடங்களிலும், இமயமலைக்கும், விந்திய மலைக்கும் இடையிலுள்ள இந்துஸ்தானத்திற்கு நேத்திரம் போன்ற பட்டணங்களாகிய டில்லி, ஆக்கிரா, லாஹர் முதலிய விடங்களிலும், விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள பம்பாய், சென்னை இன்னுஞ் சிற்சில விடங்களிலும், இவ்வதிர்ச்சி நன்குணரப்பட்டது. ஆனாலவ்வதிர்ச்சி ஒரே தன்மையாகப் பல விடங்களிலும் இருக்கவில்லை. சிலவிடங்களில் அவ்வதிர்ச்சி நன்றாக உண

ரப்படவில்லை. வேறுசில இடங்களில் அவ்வதிர்ச்சி நன்றாகப்
புலப்பட்டும் அதனால் கெடுதி யொன்றும் இல்லை. ஆனால்
நமது தேசத்து வட எல்லையாகிய இமயமலைச் சாரலின் தென்
பாகத்தில் அதனால் விளைந்த தீமையைச் சொல்வது மிகவும்
அசாத்தியமான காரியம். அவ்வதிர்ச்சி அவ்வவ்விடங்களில்,
இரண்டு மூன்று நிமிஷங்களிருந்ததாகத் தெரியவருகிறது.
இப்பூகம்ப அதிர்ச்சி நேரிடுவதற்கு முன் உலகத்தில் நேரிட்ட
பல பூகம்ப அதிர்ச்சிகளில் மிகத்தீமையை விளைவித்தது
போர்ச்சுகல் தேசத்து முக்கிய பட்டணமாகிய லிஸ்பன் நக
ரை அழித்ததுதான் என்று சாஸ்திரவல்லோர்கள் கூறியிருக்
கிறார்கள். அவ்வதிர்ச்சியினும் இவ்வதிர்ச்சி மிகக் கொடிய
தென்று யூகிக்கவேண்டியிருக்கிறது.

இவ்வதிர்ச்சியால் உண்டாகிய தீமைகளை அதிர்ச்சி
நேரிட்ட காலத்து அவ்விடத்துப் பார்த்திருந்தவரும் அதி
னின்று தப்பித்துப் பிறகு அங்குண்டான கஷ்டங்களை அநு
பவித்தவருமாகிய ஒருவர் பத்திரிகைக்கு எழுதியதை யான்
இங்கெடுத்துக் கூறுகிறேன்.

"நான் பவார்ணு என்னும் சிறிய பட்டணத்தில் வசிக்
கிறேன். ஏப்ரல்மீ 4உ செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்குப்
படுக்கையை விட்டு எழுந்து அருகிலுள்ள காட்டில் மலோ
பாதை கழிப்பதற்கும், என் வீட்டிலிருந்து இரண்டு பர்லாங்கு
களுக்குட்பட்ட தூரத்திலிருக்கிற பவாலியில் ஸ்நானம்
செய்வதற்கும் புறப்பட்டேன். தெருவழியாக நடந்து காட்
டிற்கும் பவாலிக்கும் செல்லுகிற பாதை வழியாய்ச் சென்
றேன். எனக்கு எதிரில் நேரிடுங் காட்சியைத் தடுப்பதற்கு
ரஸ்தாவில் இருமருங்கிலுமுள்ள சில மரங்களைத் தவிர வேறு
பொருளொன்றுமில்லை.

"கிழக்கிலிருந்து ஒரு பெரிய சண்டமாருதம்வீசுவதையும்,
அது புழுதியை மேலே கிளப்புவதையும் நான் கண்டேன்.
நான் இதுவரையிலும் காணாக்காட்சியாதலால், நடுக்கடலில்
புயலில் அகப்பட்ட மரக்கலம்போல அது என்னை நடுங்கச்
செய்தது. அது ஒரு புயற்காற்று என்றுநினைத்து அதுநின்ற
பின் அவ்விடம் போகலாமென்று கருதி அருகிலுள்ள என்
வீட்டிற்குத்திரும்பிச் செல்ல முயன்றேன். ஆனால், என்ன
ஆச்சரியம்! என்னெண்ணத்திற்கு முற்றும் விரோதமாய்

முடிந்தது ஓரடிகூட வீட்டைநோக்கித் திருப்பிக்க முடியவில்லை. நின்றேன், விழுந்தேன், அங்குமிங்கும் புரண்டேன். தங்குவதற்கு அருகில் வீடொன்றுமில்லை. இத்தருணத்தில் சமீபத்திலிருந்த கற்சுவரொன்று அடியற்று இடிபோல் விழுந்தது. "திக்கற்றவருக்குத் தெய்வமே துணை" யென்றபடி, தெய்வாதீனத்தால், என்மேல் விழவில்லை. யான் உயிர்தப்பினேன். உதவிக்கிடமின்றித்தனித்த எனக்கு என்ன ஆபத்து நேரிடுமோ, எந்தமரம் முறிந்து மேல் விழுமோ, என்று திகிலடைந்து, வேறுவழியின்மையால் பூமியில் குப்புற விழுந்து கிடந்தேன். நெட்டுறுப்பு நிலந்தோய நான் கிடந்தபோது உண்டான உணர்வை என்னென்பேன்? பூமி இருபிளப்பாய் விண்டதென்றும், அப்பிளப்பின் வழியாய் யான் செல்லுவதாயும் உணர்ந்தேன். அது அவ்வழியாய் என்னைக் கடலிற் சேர்க்குமென்றும் நினைத்தேன். பிறகு, கட்டிலிற் படுத்து உறங்கும் ஒருவன் அவன் அறியாது அக்கட்டிலோடு நகர்த்தப்பட்டால், அவன் நித்திரை கலைந்து அவ்விடம் விட்டுக்கட்டிலோடு அசைந்து நகர்வதை உணரும் தன்மைபோல, பூமி எனக்குக் கீழ் குலுங்கி யசைந்ததை நான் உணர்ந்தேன். ஒருகொடுமையான அதிர்ச்சி கிழக்கினின்று மேற்குநோக்கியும் மற்றொன்று மேற்கினின்று கிழக்குநோக்கியும் சென்றமையால், அப்பட்டணத்திலுள்ள குடிசை முதல் கூட கோபுரங்கள் யாவும் பூமியுடன் சமமாயின. வீடுகளும், மனைகளும், மாளிகைகளும், அஸ்திவாரச்சுவர்களுடன் சாய்ந்தமையால், பண்டங்களும், ஆடுமாடுகளும், புதைபட்டனவல்லாமல், புருஷர்களும், ஸ்திரீகளும், குழந்தைகளும் புதைபட்டார்கள். வேறு சிலர் எந்திரத்தில் அகப்பட்ட தான்யம் போல நசுக்கப்பட்டும், அரைக்கப்பட்டும், மாண்டார்கள். இவ்விதமான பூகம்பவதிர்ச்சி இரண்டு நிமிஷம் நீடித்து நின்றது. அந்தருணத்தில் ஆகாயம் மூடுபனியினால் மூடப்பட்டதோற்றம் போலத் தோற்றியது. அதிர்ச்சி நின்ற சில நிமிஷங்களுக்குப் பிறகு ஆகாயம் சுத்தமாகியது. அப்போது வீட்டை விட்டு விடியற்காலையில் வெளியேறியவர்கள் தங்கள் தங்கள் வீட்டை நோக்கிச் சென்றார்கள். அழுகுரல் அரவம் எங்கும் பரந்தது. ஒருவர்க்கொருவர் உதவி புரியும் வகையற்று நின்றார்கள். மனிதர்கள் ஆயிரக்கணக்காகப் புதைபட்டார்

கள். பலர் காயப்பட்டுக் குற்றுயிர் குறையுயிராய் உதவி புரிவாரின்றி மாண்டார்கள். வேறுசிலர் காயத்தோடு தப்பிப்பிழைத்தார்கள். பெற்றோர்களையிழந்த பிள்ளைகளும், பிள்ளைகளையிழந்த பெற்றோர்களும், எங்கும் காணப்பட்டார்கள். தாய் தந்தைகளையிழந்த குழந்தைகளின் ஆற்றொணா வழுகுரலும், கன்றை யிழந்த காராம் பசுபோற் கதறும் பெற்றோர் அழுகுரலும், கிழவர்களின் பலஹீனமாகிய வழுகுரலும், கேட்டோர் மனதை வருத்தின. உயிர் தப்பியவர்கள் தம்மாலியன்றவளவு முயற்சி செய்து சிலரைக்காப்பாற்றினார்கள்.

“என்னை நான் சுற்றிப்பார்த்தபோது, அப்பட்டணத்தில் ஒரு வீடுகூட நிமிர்ந்து நேரே நிற்கவில்லை. உயர்ந்த உப்பரிகைகளும் உன்னத வீடுகளும், பண்டம் நிறைந்த பண்டகசாலைகளும் எல்லாம் ஒரு பெரிய பாழ்பட்ட குவியலாயின. சதஜனசஞ்சாரமுள்ள அக்கடை வீதி ஒரு பெரிய இடுகாடாயிற்று. இறந்தவர்களின் பிரேதத்தை அப்பாழினின்றும் எடுக்க முயன்றபோது, எடுக்கவந்தவர்களும் கதறியழுதார்கள். அவ்வூர் வாசிகள் பெற்றோர், பிள்ளைகள், மனைவி, தம்பி, தமயன், தங்கை, அக்காள், உற்றார், உறவினர்கள், இவர்களின் சவங்களை எடுத்து மயானத்துக்குக் கொண்டுபோன ஒருவிசனகரமான காட்சியைச் சொல்ல நாவெழுமோ? எழுதக் கைதான் வருமோ? இறந்து போனவர்களின் பிரேதங்களை அப்பாழினின்றும் முற்றிலும் எடுப்பதற்கு ஒரு வாரத்திற்கு மேல் சென்றது.

“இது மாத்திரமல்ல அவ்விடத்தில் ஆகாரமில்லாமல் போய் விட்டது. உயிர்தப்பிப் பிழைத்தவர்கள் பசியால் பீடிக்கப்பட்டார்கள். என்ன செய்வது என்று தெரியாது ஏங்கினார்கள். பூகம்பத்தினின்றும் தப்பித்தபோதிலும் மிகக் கொடுமையான பசிநோயால் உயிர்துறக்க வேண்டுமென்று நினைத்தார்கள். அப்பாழினின்று எடுக்கப்பட்ட தானியக் குவியல்கள் ஓர் தினத்திற்குக்கூடப் போதவில்லை. சிறு குழந்தைகள் குடிக்கக் கஞ்சியின்றி அழுது விறைத்துப்போயின. அவ்வூரார், எல்லாம் வல்ல சர்வேசனுடைய அருள் நோக்கு இல்லையோவென்று ஏங்கி ஒரேமனதாய்த் தியானித்து நிற்கும் போது, பூகம்பத்தால் புதைபட்ட உமர்பாச்சா என்றவோர் வியாபாரி உயிரோடு அப்பாழ் நின்றும் எடுக்கப்பட்டமையால்,

அவன் அவ்வூரில் வருந்துகிற ஜனங்களுக்குத் தன்னிடமுள்ள தானியக் குவியல்களைப் பங்கிட்டான். இதோடு நில்லாமல் குடிசைதோறுஞ் சென்று அவர்களுக்குள்ள தேவைகளைக் கேட்டுத்தன்னிடத்திலுள்ள அரிசி, பருப்பு, உப்பு, முதலியவைகளைக் கொடுத்து ஒருவாறு ஆறுதல்புரிந்தான். இவ்விடத்தில் கனதனவான்கள் அநேகர் இருக்கிறார்கள்; அவர்களிற் சிலர் தங்கள் பொருள்களையும் பண்டங்களையும் தாங்கள் அநுபவிக்காமலும், பிறர்க்குதவ மனமில்லாமலும் அப்பாழ்குவியலில் புதைபட்டவைகளுக்குச் சமமாய் மறைத்துவைத்தார்கள்.''

இப்பூகம்பவதிர்ச்சி காங்கரா பள்ளத்தாக்கில் இருக்கிற முக்கிய பட்டணத்தை அழித்தது. வெகு காலமாய் இந்துக்களால் கொண்டாடப்பட்டதும், செல்வத்தால் கீர்த்திபெற்றதும் இந்தியாவின்மேல் பன்னிரண்டு முறை படையெடுத்த மகம்மது கிஸனியால் கொள்ளையடிக்கப்பட்டதும், அப்போது நாகர்கோட்டை என்று பெயர் பூண்டதுமான இப்பட்டணத்தின் கோவில் இருந்தவிடம் தெரியாமல் அழிந்தது. இதே பள்ளத்தாக்கின் ஒரு சார் இப்பூகம்பவதிர்ச்சியால் நூறடிவாழமும், இரண்டு மைல் குறுக்களவுள்ளதுமான ஒரு பெரிய புதிய ஏரி உண்டாகியது. அப்பள்ளத்தாக்கில் இறந்தவர்கள் சுமார் 15,000 பேர்களென்று கணக்கிட்டறிந்தார்கள்.

இமயமலைச் சாரலில் இருக்கிற தர்மசாலா என்றவிடத்தில் அநேகர் மாண்டார்கள். இவ்விடத்தில் மாண்டவர்கள் யாரோவெனின், யுத்தத்தில் முன்வைத்த காலைப்பின்வைக்காதவர்களும், ஆண்சிங்கங்களென்று சொல்லத் தகுந்தவர்களும், ஐரோப்பியர்களால் மிகவும் கொண்டாடப் படுகின்றவர்களுமானரணவீர கூர்க்கர் பட்டாளத்தின் பகுதியே.

நமது தேசத்திலிருக்கிற கவர்னர்கள் கோடை காலங்களில் தங்கள் தங்கள் ஆபீசுகளைக் குளிர்ச்சியால்கோடை வெப்பத்தை மாற்றக்கூடிய மலைச்சாரல்களிலுள்ள வாசஸ்தலங்களுக்கு மாற்றுவது வழக்கம். அப்படியுள்ள வாசஸ்தலங்களில் மிகமேன்மை பெற்றதும் இராஜப்பிரதிநிதிக்குக் கானல் விடாய்தீர்க்குமிடமுமாகியஸிம்லாவென்றபட்டணம்இமயமலைச் சாரலில் இருக்கிறது. இப்பூகம்ப வதிர்ச்சியால் அவ்விடத்திலுள்ள இராஜவரண்மனையின் ஓர் மேன்மாடி தகர்ந்து வீழ்ந்

தது. சிலமாதங்களுக்கு முன் வியாதியால் பீடிக்கப்பட்டு நமன் கையினின்றும் உயிர் தப்பிப் பிழைத்தவரும் ஸ்திரீகளுக்குள் நடுநாயகம் போன்றவரும், நமது இராஜப்பிரதிநிதியின் மனைவியுமாகிய லேடி கர்ஸான் என்னும் மாது கடவுள் அனுக்கிரகத்தால் யாதொரு தீங்குமின்றி அவ்வரையினின்றும் தப்பிவிக்கப்பட்டார்.

முஸ்ஸௌரி என்ற விடத்தில் இப்பூகம்ப வதிர்ச்சியுணரப்பட்டது. அதனால் சில விடங்களில் சில சில கெடுதிகள் விளைந்தன. ஆனால், ஒரு அதிசயம் என்னவென்றால், ஒரு பெரிய வீடு அதில் உறங்கிய ஜனங்களுடன் இருந்த விடத்தை விட்டு ஒரு பர்லாங்குக்கு அப்பால் யாதொரு சேதமுமின்றித் தூக்கிவைக்கப்பட்டது. அதிலுள்ளவர்கள் நித்திரைகலைந்து படுக்கை விட்டெழுந்து பார்த்தபோது தாங்கள் தங்கள் வீட்டோடு வேறு இடத்திற்கு மாற்றப்பட்ட மாயம் அறியாதவர்களாய்த் திகைத்து நின்றார்கள். பிறகு அவ்வூரிலுண்டான பூகம்ப வதிர்ச்சியால் நேரிட்டதென்று அறிந்தார்கள்.

இப்பூகம்ப வதிர்ச்சி பற்பல விடங்களில் நினைப்பதற்கரிய தீங்குகளை விளைவித்தது. அவைகளை எடுத்துரைத்தால் மிக விரியும்.

இதனால் ஜனங்களுக்குண்டான பொருள் நஷ்டத்தையும் உயிர் நஷ்டத்தையும் கருதாது, அவர்கள் கடுமையான வெயிலுக்கும் பனிக்கும் காற்றிற்கும் மழைக்கும் வருந்தாது தங்க குடிசைகள் கட்டுவதற்கு மாத்திரம் பத்துலக்ஷம் ரூபாய் குறையாமல் ஆகுமென்று சொல்லுகிறார்கள். அதற்குச் சர்க்கார் உதவியைத்தவிர, மற்றச் சனங்கள் உதவியையும் இவ்வுதவி புரிவதென்று ஏற்பட்ட கமிட்டியார்கள் கோருகிறார்கள். கடவுள் அருளே அவதாரமென்று சொல்லத்தகுந்த காருண்ணியமுடைய மேனாட்டுக் கொடையாளிகள் தங்கள் பொருள்களை கரவாது அளிக்கிறார்கள். ஜப்பான் தேசத்து மிக்காடோ என்ற வரசன் இவ்விபத்தைக் கேட்டு விசனமுற்று உதவிபுரிவதாகச் செய்தி அனுப்பியதுமன்றி இப்பூகம்பத்தின் காரணத்தை அறியுமாறு தனது உத்தியோகஸ்தர்களில் சாஸ்திர நிபுணரான ஒருவரை அனுப்பியிருக்கிறார்.

(இன்னும்வரும்)

K. இராமாநுஜ ஐயங்கார்.

தமிழ்நூல்களும் நூலாசிரியர்களும்.

5. ஜீவகசிந்தாமணியின் காலவரையறை.

ஜைனசமயிகளின் சமயநூல்கள் யாவும் முதலில் வடமொழியின்கண் தோன்றிப் பிற்பட்டு ஆங்காங்கு நடமாடும் தேசபாஷைகளில் புகுந்து எங்கும் பரவி, நாடெங்குமுலாவி வந்தன. சிந்தாமணியும் அதுவே வழியாக வெளியே வந்து எவரெவர்வாயிலும் புகழ்பெற்று எங்குஞ் சிறப்புற்றுச் சுற்றித் திரியும் முதன்மையான நூல்களிலொன்றும். ஜீவகன் கதையை வெளியிடுஞ் சிறந்த காப்பியங்கள் நான்கு உள்ளன. அவைகளில் வாதீபஸிஹ்மராலியற்றப்பட்ட கத்தியசிந்தாமணி, க்ஷத்திரசூடாமணி என்னும் இரண்டு நூல்களும் ஹரிசந்திரமகாகவியால் செய்யப்பட்ட ஜீவந்தரசம்புகாவியமும் வடமொழியிலுள்ளவை. ஹரிசந்திரகவியால் இயற்றப்பட்ட ஜீவந்தரநாடகம் என்றொரு நூல் வடமொழியிலுள்ளதாகச் சிலர் கூறியுள்ளார். ஆனால் அது இக்காலத்தில் இல்லை. எக்காலத்திலும் இருந்ததாகவும் தெரியவில்லை. திருத்தக்கதேவரால் தமிழ்ப்பாஷையில் செய்யப்பட்ட ஜீவகசிந்தாமணி ஜீவகன்சரிதத்தைப் பொருளாகக் கொண்ட காப்பியங்களில் மற்றொன்று. ஆகவே இப்பொழுது இங்கே இறுதியில் கூறின ஜீவகசிந்தாமணி முதநூலோ அல்லது வழிநூலோ வென்று யோசிக்கப்படவேண்டியது முதற்கடமை.

I. பண்டிதர் ஸ்ரீமாந் வே. சுவாமிநாதையர், 1899-வது வருஷத்தில் தாம் வெளியிட்ட ஜீவகசிந்தாமணி நாமகளிலம்பகத்தின் முகவுரையில் அடியில் வருமாறு பகர்ந்துள்ளார். "வடமொழியில் வாதீபஸிஹ்ம ரென்னுங் கவியாற் செய்யப்பட்டனவாகிய க்ஷத்திரசூடாமணியென்னுங் காப்பியமும் கத்தியசிந்தாமணியும், அரிச்சந்திரகவியால் செய்யப்பட்டதான ஜீவந்தரசம்புவும் ஜீவந்தரநாடகமும் ஜீவகன் சரிதத்தையே பொருளாகக் கொண்டிருக்கின்றன. அறுபத்துமூன்று சலாகாபுருஷர்களுடைய சரித்திரங்களை விரித்துரைப்பதாகிய மகாபுராணத்தின் ஒரு பாகத்தும், இருபத்துநான்கு தீர்த்தங்கரரின் சரித்திரங்களை யுணர்த்துவதும் மணிப்பிரவாள நடையாகவுள்ளதுமாகிய ஸ்ரீபுராணத்தில் ஸ்ரீவர்த்தமானருடைய புராணத்தும் இச்சரிதங் கூறப்பட்டுளது. மேற்கூறிய

க்ஷத்திரசூளாமணி முதலிய நூல்கள் மூன்றினையும் இந்நூலையும் வைத்து ஒப்புநோக்கி ஆராய்ந்தபோது அவற்றில் வேறு வேறாகவுள்ள நயங்கள் பலவும் ஒருங்கே இதிற் காணப்பட்டன. இந்நூலைத் தழுவியே அவைகள் செய்யப்பட்டனவோ அவற்றைத் தழுவியே இந்நூல் செய்யப்பட்டதோ என்னும் ஐயப்பாடும் அப்பொழுது நிகழ்ந்தது. ஆனாலும் அவற்றிலுள்ள வடமொழிப் பெயர்கள் பலவும், வடமொழிச்சிதைவுப் பெயர்கள் பலவும், பாகதச்சிதைவுப் பெயர்கள் பலவும், அந்நூலிலுள்ள பொருளமைதியும் இந்நூலில் ஆங்காங்கு காணப்பட்டமையின், அந்நூல்கள் இயற்றப்பட்டபின்பே இது செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், சிலப்பதிகார முதலியவற்றைப்போல இது முதலிலேயே தமிழிற் செய்யப்பட்டதன்றென்றுந் தோற்றியது. மேற்கூறியவற்றுள் கத்தியசிந்தாமணியையே இந்நூல் பெரும்பாலும் ஒத்திருக்கிறது. ஸ்ரீபுராணத்திலுள்ள ஜீவகன் கதைக்கும் இந்நூற்கதைக்குமுள்ள வேறுபாடுகள் பல. தமிழில் சிந்தாமணிமாலை யென்று ஒரு நூல் வழங்குகின்றது; அது சுத்தத் தமிழ் நடையுள்ள தன்று.'' மேற் சொன்னவற்றால், ஜீவகசிந்தாமணி ஒரு வழிநூலே, அதற்கு முதநூல் கத்தியசிந்தாமணி, க்ஷத்திரசூளாமணிமுதலியனவாயிருத்தல் வேண்டுமென்பதே சுவாமிநாதையர் அவர்களுடைய அபிப்பிராயமென விளங்கும்.

க்ஷத்திரசூடாமணியையும் ஜீவகசிந்தாமணியையும் வைத்து ஒப்புநோக்குமிடத்து அவ்விரண்டிற்கும் சில விடங்களில் முற்றிலும் ஒற்றுமைகள் பல ஏற்படுகின்றனவென்பது மறுக்கக் கூடாத விஷயம். அவைகளில் இரண்டு மூன்று மாத்திரம் இங்கு உதாரணமாகக் காட்டப்படுகின்றன.

(1) "ஜீவாநாம்பாபவைசித்த்ரீம்சூருதவந்த: ச்ருதௌபுரா |
பச்யேயுரதுநேதீவ ஸ்ரீகல்பாஹூதகிஞ்சண ||"

[க்ஷத்திரசூடாமணி 1-வது இலம்பகம் 85-வது சுலோகம்]

அதன் பொருள்:—"இலக்ஷ்மீதேவிக்குச் சமானமாயிருந்த அம்மாது, பல்லுயிர்களுந் நுகரும் பாவமுண்டென்று நூலிலே கேட்டாரெல்லாம் இப்பொழுது கண்டுணர்வாராக வென்று உலகிற்குக் காட்டுவாள் போலத் தான் தமியளானாள்.'' என்க.

"உண்டென வுரையிற் கேட்பா ருயிருறு பாவமெல்லாங்
கண்டினித் தெளிகவென்று காட்டுவாள் போலவாகி
விண்டொட நிவந்தகோயில் விண்ணவர்மகளிற் சென்றாள்
வெண்டலை பயின்ற காட்டுள் விளங்கிழை தமியளானாள்."

[ஜீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம் 274-வது பாடல்]

(2) "யக்ஷேந்த்ரோஜநியக்ஷாயமஹோ மந்த்ரஸ்ய சக்தித:|
காளாயஸம் ஹி கல்யாணம் கல்பதே ரஸயோகத:"]

[க்ஷத்திரசூடாமணி 4-வது இலம்பகம் 9-வது சுலோகம்]

அதன் பொருள்:— "இச்சுணங்கன் மந்திரத்தினது வலிமையால் இயக்கர்களுக்கு அரசனானான். இரும்பானது இரசத்தினது சேர்க்கையால் பொன்னாக மாறுகின்றதல்லவோ? இதுவு மத்தன்மைத் தென்க.

"சொல்லிய நன்மையில்லாச் சுணங்கனிவ்வுடம்பு நீங்கி
யெல்லொளித்தேவனாகிப் பிறக்குமோ வென்னவேண்டா
கொல்லுலை யகத்திட்டூதிக் கூரிரும் பிரதங்குத்த
வெல்லையில் செம்பொனாகி யெரி நிறம் பெற்றதன்றே"

[ஜீவகசிந்தாமணி குணமாலையாரிலம்பகம் 110-வது பாடல்]

(3) "க்ரந்தாநுபந்தீ ஸம்ஸாரஸ்தேநைவ ந பரிக்ஷயீ|
ரக்தேந தூஷிதம் வஸ்த்ரம் ந ஹி ரக்தேந சுத்யதி||"

[க்ஷத்திரசூடாமணி 9-வது இலம்பகம் 17-வது சுலோகம்]

அதன் பொருள்:—பற்றினால் இடையறாது வளரும் சம்சார துக்கமானது அப்பற்றினாலேயே அறாது. எப்படியெனில், இரத்தத்தினால் கறைபட்ட துணியானது இரத்தத்தினாலேயே சுத்தமாகாது, அதுபோல வென்க.

"வெண்ணிறத் துகிலி னங்கண் வீழ்ந்து மாசாகி நின்ற
வொண்ணிற வுதிரந்தன்னை யுதிரத்தலொழிக்கலாமே
பண்ணிறக்கிளவியார்தம் பசையினாற் பிறந்த பாவங்
கண்ணிற முலையினார்தங் கலவியாற் கழிக்கலாமே."

[ஜீவகசிந்தாமணி கேமசரியாரிலம்பகம், 22-வது பாட்டல்]

மேலே காட்டிய ஸம்ஸ்கிருத சுலோகங்களுக்கும் தமிழ்ப் பாடல்களுக்கும் சொற்பேதமேயல்லாது பொருட்பேதங் கொஞ்சமேனுமில்லை. வடமொழியில் முற்றும் பொருள்பட இரண்டடியில் சுருங்கச் சொல்லியிருப்பதைத் தமிழில் சொற்களைப் பெருக்கி நாலடிகளில் கூறியிருக்கிறார். இதைத் தவிர

வேறு வித்தியாசமொன்றுங் காணேம். கத்தியசிந்தாமணியினின்றும் ஜீவந்தாசம்புவினின்றும் இவ்வாறாக பலவுதாரணங்கள் எடுத்துக்காட்டக்கூடும்.

II. ஜீவகன் சரிதத்தைச் சொல்லாநின்ற காப்பியங்கள் பலவும் புராணப்பொருளேயே ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டனவென்பது அக்காப்பியங்களாலேயே வெளியாகின்றது. வாதீபஸிஹ்மர் தமது கத்தியசிந்தாமணியின் அவையடக்கத்தில்,

"நிஸ்ஸாரபூதமபி பந்தனதந்து ஜாதம்
மூர்த்நு ஜநோ வஹதி ஹி ப்ரஸவாநுஷங்காத் |
ஜீவந்தரப்ரபவபுண்யபுராணயோகாத்
வாக்யம் மமாப்யுபயலோகஹிதப்ரதாயி ||"

அதன் பொருள்:—பூவொடு சேர்ந்த நாரும் தலையாற் கொள்ளப்படுவதுபோல ஜீவகன் சரிதத்தைச் சொல்லாநின்ற புண்ணியமான புராணத்தின் சம்மந்தத்தால் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பயக்கவல்லவென் சொல்லும் யாவராலுங் கொள்ளப்படும் என்க.

கத்தியசிந்தாமணியையும க்ஷத்திரசூடாமணியையும் இயற்றியவர் ஒருவராயிருத்தலினாலும் இரண்டிலும் விஷயம்ஒன்றாயிருத்தலினாலும் க்ஷத்திரசூடாமணியைப் புராணப்பொருளேயே ஆதாரமாகக் கொண்டு இயற்றியதாக மேற்படி நூலில் பிரத்தியேகமாகச் சொல்லவேண்டியதில்லை. திருத்தக்கதேவரும் தமது ஜீவகசிந்தாமணி முத்தியிலம்பகம் ஓம்படையில்,

"முந்நீர் வலம்புரி சோர்ந்தசைந்து வாய்முரன்று முழங்கி யீன்ற
மெய்ந்நீர்த்திரு முத்திருபத்தேழ் கோத்து மிழ்ந்துதிருவில் வீசுஞ்
செந்நீர்த்திரள்வடம் போற்சிந்தாமணியோதி யுணர்ந்தார்கேட்டா
ரிந்நீரராயு யர்வரேந்து பூந்தாமரையாள் காப்பாளாமே," 545.

என்று சொல்லியிருக்கிறார். இச்செய்யுளுரையில் நச்சினார்க்கினியர் "மெய்ந் நீர்க்குத் தன் மெய்யிடத்து நீர்மையென்றும், புராணத்துப் பொருளாதலின் உண்மையான பொருளினீர்மையென்றுங் கூறுக" வென்று உரை யெழுதியிருக்கிறார். மேலும் இப்பாடலின் நான்காவதடி "இந்நீரராயுயர்வரேந்து பூந்தாமரையாள் காப்பாளாமே" என்றதன் கருத்தும் கத்தியசிந்தாமணியில் "வாக்யம் மமாப்யுபயலோகஹிதப்ரதாயி" (இம்மை

யிலும் மறுமையிலும் இன்பம் பயக்கவல்ல வென்சொல்லும் தலையாற் கொள்ளப்படும்) என்றதன்கருத்து மொன்ருகவே இருக்கிறது. அன்றியும், திருத்தக்கதேவர் ஜீவகசிந்தாமணியில்,

“முந்நீர்ப் பிறந்த பவளத்தொடு சங்கு முத்து
மந்நீருவர்க்கு மெனின் யாரவை நீக்குகிற்பா
ரிந்நீர வென் சொற் பழுதாயினுங் கொள்பவன்றே
பொய்ந்நீர வல்லாப் பொருளால் விண்புகுதுமென்பார்,”

என்று அவையடக்கங் கூறினர். நச்சினர்க்கினியர் இப்பாடலின் மூன்ருவது நான்காவதடிகளுக்கு “மெய்யாகிய புராணப் பொருளாலே வீடுபெறுவேமென்பார் எனது இவ்வாறுவர்க்குந் தன்மையுடைய சொல் தீதாயினும், அச்சொற்பொதிந்த பொருளாலே அச்சொல்லைக் கொள்வரெனத்துணிந்து கூறினர்.” என்றுரையெழுதினர். ஆதலின் புராணப் பொருளேயே கொண்டு திருத்தக்கதேவர் ஜீவகசிந்தாமணியைச் செய்தாரென்பது நச்சினர்க்கினியரின் அபிப்பிராயமென்று வெளியாகிறது.

III. திருத்தக்கதேவர் புராணப் பொருளேயே கொண்டு ஜீவகசிந்தாமணியைச் செய்தாராயினும் கத்தியசிந்தாமணி க்ஷத்திரசூடாமணி முதலிய நூல்கள் தம் நூலுக்கு முற்பட்டவைகளாயிருக்குமாயின், அவைகளை அவர் பார்த்திருத்தல்கூடாதென்பதற்கு நியாயமில்லை. அது நிற்க. புராணத்திற்குப் பிற்பட்ட காலத்தினதே ஜீவகசிந்தாமணி யென்பதற்கையமில்லை. ஜீவகஸ்வாமியின் கதைக்கு மஹாபுராணமே ஆதாரமென்று ஜைனர்கள் சொல்லுகிருர்கள். மணிப்பிரவாளநடையாயமைந்திருக்கும் ஸ்ரீபுராணம் மிகப்பிந்தியதென்றுஞ் சொல்லுகிருர்கள். மஹாபுராணம் செய்ய முதன்முதல் ஆரம்பித்தவர் ஜினஸேநாசாரியர். அவர் வீரஸேநாசாரியருடைய சிஷர். அவர் சகாப்தம் 705 (கி. பி. 783) ல் ஹரிவம்ச புராணம் செய்தவர். பிறகு, சகாப்தம் 735 (கி. பி. 813) ல் பட்டத்துக்கு வந்த இராஷ்டிரகூட ராட்டிரசனை 1-வது அமோகவர்ஷனுக்கு ஆசாரியராயினர். அவ்வாசனது ஆளுகைநாளில், அவர் வீரஸேநாசாரியருடைய மற்ருெரு சிஷரான விநயஸேநாசாரியார் தம்மைக் கேட்டுக்கொண்டபடி பார்ச்சுவநாததீர்த்தங்கரர்விஷயமாக பார்ச்சுவாப்பியுதயம் என்ருெரு காவியஞ்செய்து முடித்தனர். அக்காவியம் செய்துமுடித்தவிதம் மிக்க விந்தையானது. காளிதாஸ கவி செய்த மேகஸந்தேசம் என்னும் அருமையான காவியத்தின்

ஒவ்வொரு அடியையும் வரிசைக்கிரமமாகத் தமது காவியத்தில் ஒவ்வொரு சுலோகத்தின் கடைசி அடியாகச் சேர்த்தமைத்து, ஒரு அடியையேனும் விடாமலும் தாம் கொண்ட கருத்துக் கெடாமலும், தமது காவியத்தைச் செய்து முடித்தார். அவர் அப்படிச் செய்ததாகத் தமது காவியத்தில் சொல்லாதிருந்திருப்பாராயின், பிற்காலத்தவர் காளிதாஸன் முந்தியவரோ அல்லது அவர் முந்தியவரோவென்று கண்டறிந்து சொல்வது அசாத்தியமாகும். பிறகு, அவர் மகாபுராணம் செய்யத் துடங்கினர். ஆயினும் அது முடிவு பெறுவதற்கு முந்தியே அவர் காலம் முடிவுபெற்றது. அவரது மாணாக்கராகிய குணபத்திராசாரியர் மஹாபுராணத்தைக் குறைதீர்த்து முடிவுபெற இயற்றினர். மஹாபுராணத்தில் ஜினஸேநாசாரியர் இயற்றிய பூர்வ பாகத்துக்கு பூர்வபுராணம் என்றும் குணபத்திராசாரியர் இயற்றிய உத்தரபாகத்துக்கு உத்தரபுராணம் என்றும் பெயர் வழங்கிவருகிறது. ஜீவகஸ்வாமியின் சரித்திரம் குணபத்திராசாரியர் செய்த உத்தரபுராணத்திலே தான் சொல்லப்பட்டிருக்கிறது. குணபத்திராசாரியர் மஹாபுராணம் செய்து முடித்த காலம், இராஷ்டிரகூட அரசனை அகாலவர்ஷன் அரசாண்ட காலமென்றும், அது சகாப்தம் 820 (கி. பி. 898) பிங்கள வருஷம் ஆனி மாதமென்றும் அந்நூலின் இறுதியிலேயே அவரால் சொல்லப்பட்டுளது. அது வருமாறு:—

"அகாலவர்ஷபூபாலே பாலயத்யகிலாமிளாம் |
* * * * * ||
சகந்ருபகாலாப்யந்தரவிம்சத்யதிகாஷ்ட சதமிதாப்தே |
மங்களமஹார்த்தகாரிணி பிங்களநாமநி ஸமஸ்தஜநஸுகதே ||
ஸ்ரீபஞ்சம்யாம்புதார்த்ராயுஜிதிவஸகரேமந்த்ரிவாரேபுதாம்சே
பூர்வாயாம் ஸிம்ஹலக்னே தநுஷி தரணிஜே வ்ர்ச்சிகார்க்
கௌ துலாயாம் |
ஸர்ப்பே சுக்ரே குளீரே கவி ச ஸுரகுரௌ நிஷ்டிதம்பவ்ய
வர்யை:
ப்ராப்தேஜ்யம் ஸர்வஸாரம் ஜகதி விஜயதே புண்யமேதத்
புராணம் ||"

மேலும், இவரைப்பற்றித் தமிழகம் நம்பர் 3, பக்கம் 70, பார்க்க. இவருடைய பரம்பரை வருமாறு:—

வீரஸேநாசாரியர்
|
(சிஷர்) 1. ஜினஸேநாசாரியர் (சிஷர்) 2. விநயஸேநாசாரியர்
மஹாபுராணத்தை ஆரம்பித்தவர்
|
(சிஷர்) குணபத்திராசாரியர்
கி. பி. 898-ல்,
மஹாபுராணத்தை முடித்தவர்
|
(சிஷர்) மண்டல புருஷன்
சூடாமணி நிகண்டுசெய்தவர்

IV. ஆகவே, கி. பி. 898-வது வருஷத்திற்கு அதாவது 9-வது நூற்ருண்டிற்குப்பிறகே ஜீவகசிந்தாமணி இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்பது நிச்சயம். மேலும் கி. பி. 14-வது நூற்ருண்டின் துவக்கத்திலிருந்த உமாபதிசிவாசாரியர் தமது திருத்தொண்டர் புராணவரலாற்றில் சோழநாட்டை ஆண்ட அநபாய சோழமஹாராஜா தமது சமயக்கொள்கைகளை மறந்து ஜீவகசிந்தாமணியையே படித்துக்கொண்டிருக்கக் கண்டு அவ்வரசருக்காகச் சேக்கிழார்நாயனர் பெரியபுராணத்தைச் செய்து முடித்ததாக வெழுதியிருக்கிருர். அச்சோழராஜனே இராஜேந்திரசோழதேவனென்றும் முதலாவது குலோத்துங்கசோழதேவனென்றும் சுங்கந்தவிர்த்த சோழதேவனென்றும் சொல்லப்படுபவன். அச்சோழராஜன் காலம் கி. பி. 1070 முதல் கி. பி. 1118 வரையிலென்று சாஸந சர்ச்சாகரரான நிபுணர்கள் வரையறுத்துக் கூறியிருக்கிருர்கள். பெரியபுராணத்திற்கு முந்தி ஜீவகசிந்தாமணியைப்பற்றிய பிரஸ்தாவம் ஒரு நூலிலேயும் காணேம். பெரியபுராணம் அமைத்த காரணமாகத்தான் ஜீவகசிந்தாமணியைப்பற்றிய பிரஸ்தாவம் முதல் முதல் ஏற்படுகின்றது. ஆகையால் ஜீவகசிந்தாமணி பெரியபுராணத்திற்கு முற்பட்ட காலத்ததென்று தெரிகிறது. ஏற்கனவே 9-வது நூற்ருண்டுக்குப் பிற்பட்டதென்று காட்டினேம். ஆகவே திருத்தக்கதேவரால் செய்யப்பட்ட ஜீவகசிந்தாமணி கி. பி. 9-வது நூற்ருண்டுக்குப்பிற்பட்டு 10-வது நூற்ருண்டின் துவக்கத்திற்கும் 11-வது நூற்ருண்டின் பிற்பகுதிக்கும் இடைப்பட்ட காலத்ததென்பது துணிவு.

T. S. குப்புஸ்வாமி சாஸ்திரிகள்.

உ

கணபதிதுணை.

அணங்குகொ லென்னுங் குறள் கைக்கிளைத் திணையே.

யான்முன்னெழுதிய இருவர் மாறுகோளொருதலைத்துணி பென்பதும், அது குறித்து ஸ்ரீமத் கணேசையரவர்களெழுதி னவும், யானவர்பொருட்டெழுதிய விடையும், செந்தமிழின் கண் வெளிப்போந்தபின், சென்ற பங்குனி சித்திரை வைகாசி இம்முத்திங்கட் செந்தமிழினும் ஆகுபெயரன் மொழித் தொகை யாராய்ச்சியெனவொன்று மகா-ள-ஸ்ரீ நா. வேதாசலம் பிள்ளையவர்களாலெழுதப்பட்டு வெளிப்போந்தமை கண்ணுற் றேன். அஃது என்னுரையை உடன்படுவதும் இயைபில்ல தும் மறுதலைபோல்வது மென முப்பகுதித்தாகக் காணப்படு கின்றது.

அவற்றுள்—முதற்பகுதி, என் கருத்தின்படி கனங் குழை யென்பது கனங்குழையாளையுணர்த்தாமல் அவளது தன்மையை யுணர்த்திற்றெனக் கோடல் பரிமேலழகர் கருத் தென்பதும், அந்நிலைவர் ஆகுபெயரெனவுரைத்தது பொருந் துமென்பதும், அவர் கருத்தறியாது ஆகுபெயருமன்மொழித் தொகையுமொன்றென அவர் கொண்டா ரெனக்கருதி அவ ரைச் சிவஞானமுனிவர் மறுத்தது பொருந்தாதென்பதும், ஆகுபெயருமன்மொழித்தொகையு மொன்றேயெனச் சேனா வரையர் சொற்பற்றிக் கூறிய கணேசையருரை யமையாதென்ப தும், பிறவுங்கூறுவது.

இடைப்பகுதி, தருக்க நெறிக்கண் எனக்கும் அவர்க்கும் வேண்டாவுரை. அது பரிமேலழகர் அணங்குகொல் என்னும் குறளிடத்தன்றிப் பிறவிடத்தும் வழுவிக் கூறுவரென்பதும், அவ்வாறுதல் நாம் நடாத்தும் ஞானசாகரத்திற் காட்டினு மென்பதும், தஞ்சை வாணன்கோவையுடையாரும் பிறரும் இடர்ப்பட்டு இழுக்குறுதலுங் காண்கவென்பதும், பிறவுங் கூறுவது.

கடைப்பகுதி, அணங்குகொலென்னுங் குறட்குப்பரிமேலழகருரையை மறுத்துப் புதுவதோருரை கூறுவது.

அவற்றுண் முதற்பகுதி என்கருத்தே கூறுதலானும் இடைப்பகுதி யெடுத்துக்கொண்ட வாதத்திற்கு வேண்டப்படாமையானும் யானவற்றை மறுத்திலன். கடைப்பகுதி பிள்ளையவர்கள் கூறிய புத்துரையும் அக்குறட்கமையுங் கொல்லோவென இளைஞர்க்கு ஐயுறுத்துமாதலின் அவர் பொருட்டு அது பொருந்தாமையுணர்த்தப்புக்கேன்.

அவர் செந்தமிழ் 164-வது பக்கத்து முதற்கட் பரிமேலழகரைமறுத்தது பொருந்தாதெனவுரைத்தாரென்று பிறன்கூற்றாக்கி யுரையாராகி, இனிப்பரிமேலழகியார் கருத்துண்மை தேறாது சிவஞானமுனிவர் மறுக்கத்தலைப்பட்டது பொருத்தமுடைத்தன்றாதல் தெற்றென விளங்க நிறுத்துவாராயினரென்று என் கருத்தை மேற்கொண்டு, முனிவர் அழகியார் கருத்துத்தேறாமையையுடன்பட்டுப், பின் அதற்குமாறாகச் செந்தமிழ் 218-வது பக்கத்துள் முனிவர் பரிமேலழகியாருரை இயையாதென்னுங் கருத்துப்பற்றியே மறுத்தாரென்றும், கனங்குழை யென்னுந் தொகையை ஆகுபெயரெனக் கொள்ளாது அதன்புறத்துத்தொக்கமகள் என்பதை ஆகுபெயராகக்கொண்ட பரிமேலழகியார் கருத்துணராதாரல்லரென்றும், 245-ம் பக்கத்தும் இக்கருத்தே கூறிச் சிவஞான முனிவர் கருத்தை யுணராமல் யானவர்க்குக் குற்றங்கூறினேனென்று முன்னொடு பின்மலைவுரைத்தார்.

இனி முனிவர் தமது சூறாவளியில் 24-வது பொருண்முதல் என்னுஞ் சூத்திரமறுத்தலைக்கண், இலக்கண விளக்க நூலாரை நோக்கி ஈண்டாகுபெயரு மன்மொழித் தொகையுமொன்றென்றவர் ஆகுபெயர் வினைக்குறிப் பன்மொழிவிகாரம் என வேறுகூறலான் அவர்க்குங் கருத்தன்மையுணர்கவென்றும், பரிமேலழகியார் கனங்குழையென்றதனை ஆகுபெயரென்றாரெனின்; அவர் பொச்சாவாமனமெனக் கூறியதை மறுத்துப் பொச்சாவாமையாகிய கருவியெனத் தாமுமுரைத்தாராதலின், அவர் கூறியவெல்லா முடன்பாடென்பது தமக்குங் கருத்தன்றென்க வென்றுங் கூறியவாற்றாற், பரிமேலழகரும் இலக்கணவிளக்க நூலார்போல ஆகுபெயரு மன்மொழித் தொகையுமொன்றென்னுங் கருத்தாற் கனங்குழையை ஆகு

பெயரென்றாரெனக் கொண்டமையும். கனங்குழையாளது தன்மையை யுணர்த்தலின் ஆகுபெயரென்ற பரிமேலழகர் கருத்தறியாமையும் நன்குவிளங்கும்.

இனி ஆகுபெயரு மன்மொழித்தொகையு மொன்றெனப்பரிமேலழகர் கொண்டிலரெனத்தாமுணரின் ஆண்டுக்கனங்குழையென்பது அன்மொழிப்பொருளாகிய கனங்குழையாளையுணர்த்தாமல் ஆகுபெயராகிய அவளது தன்மையை யுணர்த்திற்றெனல் பரிமேலழகர் கருத்தாகலின், இரண்டு மொன்றெனல் பொருந்தாதெனக்கூறி இலக்கணவிளக்க நூலாரை மறுத்தல் வேண்டும். அவ்வாறின்மையாற் பரிமேலழகர் கருத்துணர்ந்தே முனிவர் மறுத்தாரெனலும், யான் முனிவர் கருத்தையுணராது அவர்க்குங் குற்றங்கூறினேனெனலும் பொருந்தாமைகாண்க.

இதுபோலவே முனிவர் பிறர் கருத்தறியாது மறுத்தன பிறவுமுள. அவற்றுளு மொன்றிதற் குதாரணமாகக் காட்டப்புக்கேன்.

இளம்பூரணர் தொல்காப்பியப்பாயிரத்துள் ஆயிடையென்பதற்கு அவ்வென்றதாகுபெயரான், அவற்றை யெல்லையாகவுடைய நிலத்தினை யென்றார். அவர் கருத்து அவ், என்ற வகரவீற்றுப்பெயர், ஆகுபெயராமென்பது. இக்கருத்து யானாகவுரைத்தேனல்லேன்: அவர் தாமே கிளந்தவல்ல என்னுஞ் சூத்திரவுரையில் "ஆயிடையென்பது அவ்வென்னும் வகரவீறு வேறுபட்டு முடிந்தது", என்றுரைத்தமையானினிது விளங்கும்.

இவ்வாறாக முனிவர் பின்னுரையை நோக்காது, முன்னர் அவ்வென்ற தாகுபெயரான் என்றவிடத்து அதனை அ என்றது ஆகுபெயரானெனத் திரிபடக்கொண்டு தமது பாயிரவிருத்தியுள், இஃதறியாதார் தனித்து நின்று பொருளுணர்த்தாத அகரச்சுட்டை ஆகுபெயரென்றும் அவற்றுக்குள்ளென உருபுவிரித்து மிடர்ப்படுபவென்றார். இளம்பூரணர் அகரச்சுட்டை ஆகுபெயரெனக் கூறாமையானும், வகரவீற்றுச் சுட்டுப்பெயரையே ஆகுபெயரென்றமையானும், அவர் இடர்ப்பட்டிலரென்பதும், தனித்து நின்று பொருளுணர்த்தாத அகரச்சுட்டை ஆகுபெயரென்றாரெனக் கூறினமையான் முனிவரே இளம்பூரணர் கருத்தறியாது அவருக்குக்குற்றங்

கூறினாரென்பதும் வெள்ளிடை மலைபோல் விளங்கும். இனிச் சுட்டேயன்றிச் சுட்டுப்பெயரு மாகுபெயராகா தென்னுங் கருத்தாற் கூறினாரெனின், அவ்வென்பது ஏனைய பெயர்போலவே தனித்து நின்றும் பொருளுணர்த்தலின், தனித்து நின்று பொருளுணர்த்தாத அகரச்சுட்டெனல் வழுப்படும். சுட்டேயன்றி வகர வீறும் முதனீளாதென்னுங் கருத்தாற் கூறினாரெனின், நச்சினார்க்கினியரும் கிளந்தவல்லவென்னுஞ் சூத்திரத்தில் ஆயிடை யென்பதுருபாதலின், நீடவருதலென்பதனான் முடியாது நீண்டு வகரவீறு வேறுபட முடிந்ததென்றுரைத்தமையானும் பதிற்றுப்பத்தில் இமயந்தென்னங் குமரியோடாயிடை என்பதற்கு அவற்றுக்கு இடையெனப் பொருள்கூறி ஆவ்வென்னும் வகரவீற்றுப்பெயர் ஆயிடையென முடிந்ததென்று அவ்வுரைகாரர் கூறினமையானும், முன்னோர் அகரச்சுட்டேயன்றி அவ்வென்னுஞ் சுட்டுப் பெயருஞ் செய்யுளின்கண் முதனீண்டு முடியுமெனக் கொண்டமை விளங்கலின், அவ்விதி தமக்குடன்பாடின்றேல் இன்ன காரணத்தால் வகரவீறு முதனீளாதென ஏதுக்கூறி அதனை மறுத்தல் வேண்டுமன்றிச் சுட்டை ஆகுபெயரென்றாரென்றும் அவற்றுக்குள்ளென உருபு விரித்து இடர்ப்பட்டாரென்றுங் கூறல் பொருந்தாது. இதுபோலவே கனங்குழை ஆகுபெயராமென்ற பரிமேலழகர் கருத்தை முனிவருணராமைதேற்றமென்க. இனி அவர் செந்தமிழ் 172-வது பக்கத்துள் ஆகுபெயர் கனங்குழை என்னுந் தொகைமேல் வந்ததன்றென்றும், அதன் புறத்துத் தொக்க மகளென்னுஞ் சொல்லின்கட் செயற்கைப் படுத்துணரத்தோன்றியதா மென்றுணர்கவென்றும், இங்ஙனமாகலின் ஆகுபெயரிலக்கணஞ் சிதையுமாறு யாண்டையதென்க என்றும், என்கருத்தையுடன்பட்டதுமன்றி அன்மொழி யாகுபெயராகி வருதற்கு உலகவழக்கிற் பொற்றுமனை கட்பூசனைபுரிந்தானென யான்காட்டிய உதாரணத்தையுமறுத்து, பின் அதற்கு மாறாக ஒருவாக்கியத்துள் விரிந்து நின்ற ஓர் இயற்பெயர் ஆகுபெயர்ப் பொருட்கண் வருதலே முறையாமன்றித் தொகை நிலைப்புறத்துத்தொக்க ஒரு சொன்மேல் வருதல் பண்டைப்புலவின்றி வழக்கிடைக்காணப்படாப் புதுமைத்தாகலின் அஃது ஆகுபெயராகாதென்றார். இனிப்பற்பல பணியாகக்காரியப்படல் பொன்னின் இலக்கண மென்ற

பிறன் கூற்றையுடன்பட்டு அவன் காட்டிய புதுப் பொற்பணியையுங் கண்டு, பின்பு பண்டைப்பொற்கொல்லர் செய்தபணி என்னால் யாண்டுங் காணப்படாமையின் அவ்விலக்கணங் கொள்ளேனென்றாற்போல, இலக்கணஞ் சிதையுமாறி யாண்டையதென்கவென்று நான் உரைத்த இலக்கணத்தையுடன்பட்டு, உதாரணத்தையுமறாதேற்றுப்பின்பு, பண்டைப் புலனெறிவழக்கிடைக் காணப் படாப் புதுமைத்தாகலிற் கொள்ளேனெனல் முறையன்றாம்.

இதுவன்றி அளவில்லாத புலனெறிவழக்கிறந்தமையாலும் இறவாதெஞ்சினவற்றுள்ளும் எல்லா மறிந்தாரொருவருமின்மையிற்றாமறியாதனவும் பலவிருத்தல் கூடுமாதலானும், அது காணப்படாமைபற்றி இலக்கணங் கொள்ளேனென லமையாது. இலக்கண முண்மையாயின் அதனிலக்கியம் பண்டைப் புலனெறி வழக்கினு முளவென்பது தேற்றமாதலின், இயற்பெயரேயன்றி அன்மொழித்தொகைக் காரணப் பெயருமாகுபெயராதற் கேற்புடைத்தென நியாயங்கூறலே என் கடனன்றி முற்றறிவின்மையாற் பண்டைப் புலனெறிவழக்கிடை யுதாரணங்காட்டல் எனக்குங் கடனன்று. அறிந்து காட்டின் அதுவுங்குற்றமாகாது. இவ்வாற்றான் அன்மொழித்தொகை ஆகுபெயராதலில்லையெனற்குப் புலனெறி வழக்கிடைக்காணாமையேதுவாதலின்றென வறிக.

(இன்னும்வரும்)

சோழவந்தான்,

அ. சண்முகம் பிள்ளை.

௨

விஷ்ணுவர்த்தனன்.

விஷ்ணுவர்த்தனன் மைசூரின் சுற்றுப்பக்கங்களிலுள்ள நாடுகளை வெற்றிகொண்டு, அவைகளை மைசூருடன் சேர்த்து இராஜ்யமாக்கிப், பரிபாலனஞ்செய்தவர். எப்படி மைசூர் இராஜ்யமாயிற்றென்று, இம்முறை எழுதுவதாகக் கருதினோமல்

லம். ஈண்டு வரையப்புகுந்தது என்னையோவெனின், அவர் எக்காரணத்தால் தம் பூர்விக மதமாகிய ஜைனத்தைக் கைசோரவிட்டு வைஷ்ணவ மதத்தை மேற்கொண்டாரென்பதே?

இது கூறப்பெறுமுன், அவர் அரசாட்சிகாலத்து மைசூரில் என்னென்ன மதங்களிருந்தன, அவைகளின் நிலைமை எத்தன்மைத்தென என்று கூறலவசியம். மேலும், இராமாநுஜரின் அடியார்கள் எவ்வாறு தெய்வத்தை யுபாஸித்தார்களென்பதையும் கருதல்வேண்டும். கால்ட்வேல் பாதிரியார், (Bishop Caldwell) வைஷ்ணவத்தை ஸ்தாபித்தவர் இராமாநுஜரென்றும் அவரின் சீடர்களே ஆழ்வார்களென்றும் பகிரங்கமாய் முதலில் வெளியிட்டார். பிரம்ம. ஸ்ரீ சேஷகிரி சாஸ்திரியாரவர்கள், கால்ட்வேல் ஆராய்ச்சிகாலத்தகப்படாத சில சாதனங்களைக்கொண்டு, பெரியாழ்வார் காலத்தவராகிய வல்லபதேவர்தான் அதிவீரராம பாண்டியன் (1563 கி-பி) என்றும், ஆழ்வார்கள் காலத்தை அப்பாண்டியனுக்குப் பின்னருமாய் வகுத்தனர். பாரிஸ் நகரவாசியாகிய ஜூலியன்வின்ஸன் (Professor Julien Vinson) வைஷ்ணவ மதங் கிளம்பியது 15-ம் நூற்றாண்டிலோ, 16-ம் நூற்றாண்டிலோ வென்கிறார். டாக்டர் ஹூல்ட்ஸ் (Dr. Hultzch) சோழநாட்டுச் சம்மந்தமான சில சாசனங்களினாதாரவைக்கொண்டு, மேற்கூறிய வபிப்பிராயங்களைச் சரியல்லவென்று நிரூபித்தார். மிஸ்டர் வேங்கய்யா அவர்கள் சென்ற வருஷத்திய அறிக்கைப்பத்திரத்தில், திருவல்லிக்கேணிக் கோவிலினுள்ள ஒரு சிலாசாசனத்தைக்கொண்டு பல்லவ அரசர்களின் காலத்தில் அது இருந்ததெனக்கூறியுள்ளார். இரண்டாவது நூற்றாண்டிலெழுதப்பெற்ற சிலப்பதிகாரத்தில் திருப்பதி, ஸ்ரீரங்கம், திருமாலிருஞ்சோலை முதலிய ஸ்தலங்களிலுள்ள கோயில்களைப்பற்றிக் கூறப்பெற்றுளது. பரமேசுவர வர்ம பல்லவ அரசன் காஞ்சியில் பரமேசுரவிண்ணகரம் (உலகளந்த பெருமாள் கோயில்) திருப்பணி செய்துவித்தார். தட்சிணத்தில் பல்லவ அரசர்களின் இராஜ்யபாரம் வளர்ந்தோங்கியிருந்த காலம், இந்துமதம் புறமதங்களாகிய ஜைனமதத்தையும், புத்தமதத்தையும் தலைதூக்கவொட்டாவண்ணம் செய்தகாலமா யிருத்தல்வேண்டும். இக்காலத்தில்தான் திருப்பணி மேற்கொண்ட காவலர்களின் வம்சத்தவர்கள் பல பக்கங்களில் விஷ்ணு ஆலயங்களையும் சிவாலயங்களையும் கட்டு

வித்தது. மகாவல்லிபுரக் கோயில் திருப்பணி செய்தவர் சிம்ம விஷ்ணு, நரசிம்ம வர்மன், மகாமல்லன் என்ற முப்பெயர்களை யுங் கொண்டோன். இவர், ஹையூன்சிங் (Hieun Thsang,) பார்வையிட்ட திவ்ய அரண்மனைக்காவலனாகிய இரண் டாவது புலிகேசனுக்குப் போட்டியாயிருந்தவர். பல்லவ அரசர்களுக்கு முன்னிருந்திருக்க வேண்டிய கோச்செங் கண்ணன் என்னும் சோழவரசன் விஷ்ணு சிவாலயங்கள் பல ஒன்றுக் கொன்று மிக்க சமீபத்திலிருக்கும்படி கட்டினன். இதனால் வைஷ்ணவமும், சைவமும் அக்காலத்து மன்னர் களால் போற்றப்பட்டன வென்றும், அவர்களால் அபிவிருத்தி செய்யப்பெற்று ஒரேகாலத்தில் வளர்ந்து வந்தன வென்றும், தெரிகிறது.

இக்காலத்தில், மைசூரில் மாத்திரம் ஜைன சமயமே நிலை கொண்டிருந்தது. கோங்க பரம்பரையின் கடைசி மன்னன், ஸ்ரீரங்கக் கோயிலைத்திருப்பணி செய்வித்தவனென்று தோன் றினபோதிலும், அக்கங்க மன்னர்கள் ஜைன மதத்தார்க ளென்றே தோன்றுகிறது. மேலும் அக்கங்க மன்னர்கள் சில விஷ்ணு, சிவாலயங்களுக்கும் மானியமளித்திருப்பதாகவும் சாசனங்களில் கண்டுள. விஷ்ணுவர்த்தனன் அரசாட்சி கா லத்து, சிவபுர மென்ற மத்தூர் சிவதேவஸ்தானத்துத் தர்ம கர்த்தா, இரண்டாவது சிவமாரமன்னன் (750 கி. பி.) அளித்த தாம்பிர சாசன ஆதாரத்தைக் கொண்டு பக்கத்துள்ள ஒரு துண்டு நிலத்தின் மீது பாத்தியம் பாராட்டினராம். விஷ்ணு ஆலயங்களைப்பற்றிய இது போன்ற குறிப்புக்களும் இருக் கின்றன. சிவமாரன் தந்தை ஸ்ரீபுருஷமுத்தராசா ஸ்ரீமந் நாராயணன் பாதசேவையில் மனம் பொதிந்துடையவர். ஆகையால் இராமாநுஜர் காலத்துக்கு முன்னமேயே வைஷ்ணவ மதமிருந்ததாகத் தெரிகிறது. ஆனல் இவர் அம்மதத்தைச் சீர்திருத்திச் சில கொள்கைகளை மாற்றியும் சேர்த்து மிருக்க லாம்.

சோழவரசர்களின் செல்வாக்கும், அதிகாரமு மதிகரிக்க வதிகரிக்கச் சைவமதமும் செழித்தோங்கி வந்தது. சோழமன் னர்கள் சைவப்பற்றுடையவரானதால் புதிதாகக் கோயில்கள் கட்டுவித்தது மாத்திரமேயல்லாமல், தொன்று தொட்டிருக்கு

மாலயங்களுக்கும் எதேஷ்டமாய் மானியம் விட்டார்கள். விஷ்ணு ஆலயங்களுக்குள்ள மானியங்களைச் சாசுவதமாக்குவதும், அக்கோயில்களுக்கு மானியங்களளிப்பதும் அபூர்வம். 1000 கி. பி. யில் மதம் பரவுதலைப்பற்றி விசேஷமுயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. ஜைனமதத்துடன் வாதமதிகரித்தது. சைவ, வைணவ மத குருக்கள் தங்கள் தங்கள் மதத்தைப் பரவச்செய்வதில் விசேஷ கவலை செலுத்தினார்கள். இவ்வித மதவைராக்கிய முண்டான காலத்தில் தான் சோழர் மைசூரைக் கைப்பற்றியது. இவ்வெற்றி மைசூரில் சோழரின் சைவமதத்தையும் சௌளுக்கியர்களின் ஜைனத்தையும் எதிரெதிரே கொண்டுவந்து சேர்த்தது. ஆஹவமல்ல சோமேசுவரர் காலத்துக்கு முன்னமேயே, நாலம்பாவடி சௌளுக்கியர்களுக்கு விடப்பட்டது. அடிக்கடி இவ்வெல்லையில் நடந்த சண்டை, மதசமயத்தைக்குறித்துமிருந்தது. விஷ்ணுவர்த்தனன் மைசூர் இராஜாங்க விஷயத்தில் தலையிட்டகாலத்தில், மதப் போர் நடந்துகொண்டிருந்ததால், இராஜ்யம் வெகுகுழப்பமான நிலைமையிலிருந்தது. ஜைனமதம் உன்னதஸ்திதியி லிருந்த காலத்துக்கூட சைவ வைஷ்ணவ மதஸ்தர்கள் விசேஷமாயிருந்தார்கள்.

இப்படியிருக்குங்காலத்தில் காஞ்சி நகரத்துப் பிராமண இளைஞர், ஆளவந்தார் ஸ்தானத்தை (Apostolic Seat) ஸ்ரீரங்கத்தில் வகித்தார். இவ்விளைஞர் தான் ஸ்ரீ இராமாநுஜர். இவர் 937-வது சகத்திலவதரித்தவர். இவர் இந்தியாவை மிகவும் சீர் திருத்தினார். இவர் சிடர்கள் நாட்டின் பலபாகங்களிலுமிருக்கிறார்கள். தம்மனைவியைத்துறந்து சந்நியாசம்பெற்றுத் தம் வாழ்நாட்களின் சிறந்த நாட்களை ஸ்ரீரங்க வைணவச் சிறுர்களுக்குக் கல்வி கற்பிப்பதில் செலவுசெய்தார். வேதாந்தபோதனைகளில் புறமதங்களைப்பற்றித் தூஷித்தார். இக்காரணத்தால் சிலர் இவரைப் பகைத்துக்கொண்டார். மதவைராக்கியரென்று அவர் நூல்களால் ஒன்றும் புலப்படவில்லை.

(இன்னும்வரும்.)

S. N. ஸ்ரீநிவாசன்.

அங்கம்—2 களம்—3.

போர்க்களத்தில் மற்றொருசார் நாகமன்படை வீரசேகரச் சோழன் படை முன்னின்று போர் செய்யத் தொடங்கிற்று. நாகமன் பக்கம் செயமோ, சோழன் பக்கம் செயமோ என்று சொல்வது அரிதாகும்படி உச்சிகாலம் வரையும் சண்டை நடந்தது. அரியநாதன், கோலாகலன் சேனையைச் சின்னபின்னஞ் செய்த பிறகு, சதாசிவன் தன்னுடன் கொண்டு வந்த எண்ணூறு போர் வீரர்களுடன் விரைந்து போர்க்களத்துக்கு வந்து வீரசேகரச் சோழனைப் பின்னே வளைந்து கொண்டான். வீரசேகரச் சோழனுக்கு முன்னே நாகமனும், பின்னே அரியநாதனுமிருந்து போர் செய்த காலையில் சொக்கலிங்கன் என்னும் ஈழப்படைத்தலைவன் சோழன் படையினின்றும் விலகி அரியநாதனைச் சேர்ந்தான். இவன் அவ்வாறு செய்தது இராஜத்துரோகமன்று. இச்சொக்கலிங்கன் முன்னமே சோழனால் துரத்தப்பட்ட சந்திரசேகர பாண்டியனுடைய வலதுகையன்ன துணைவன். தனதரசன் துரத்தப்பட்டது முதல் சோழனிடத்தே மிகுந்த அருவருப்புக் கொண்டிருந்தான். இப்போது சமயம் வாய்த்ததும்சோழனை விட்டு விலகினன். இது நிற்க, யுத்தகளத்தில் மாலைப் பொழுதில் பெரும் போர் விளைந்தது; சோழன் கொல்லப்பட்டான். அவன் சேனையும் புறங்காட்டி ஓடிற்று. அரியநாதனும், நாகமனும் செயபேரியடித்துக் கலந்தனர்.

[இவ்விஷயம் இக்களத்தில், யாழ்ப்பாண வீரர்களும், சிங்கள வீரனும் பேசும் சம்பாஷணையிலமைந்துள்து.]

அங்கம்—2, களம்—3.

இடம். சோழமாளிகைப் புறத்தோர் வெற்றிடம். காலம்-எற்பாடு.

(மூன்றுயாழ்ப்பாண வீரர்களும், ஒரு சிங்கள வீரனும்
உரையாடிநிற்க)

1-ம் யாழ். உண்ட வீட்டிற்கிரண்டக முன்னுவாருளரோ? யாமுஞ் சோழன் குனையில் வீரரெனச் சமைந்தேம். இங்ஙனே நமது தானைக்காவலர் அரியநாதன்மாட்டணுகினர்.

அன்னவர் பிழைத்தார். யாமுமேழாட்டைச் செலுத்தி யிப்பாண்டி நாட்டிற் சேவகம் புரிந்தாம். இவ்வணம் இத் தண்டத்தலைவர் தவறிழைப்பா ரெனக்கருதிலேம். கேண் மின்! வீரர்காள்! நம்படைத்தலைவர் அரியநாதனை யணுக வும், வீரசேகரனுடன் கைகலப்ப நமதுளம் எழுந்ததோ? போர் புரிந்தா லொப்ப நடித்தனமே யன்றி வேறில்லை.

2-ம் யாழ். வற்கடம் ஆண்டு பன்னிரண்டு கழிந்த பின்னர், சாமையும், சோளமும் செழித்துற, வைகை நன்னதி நீர் மல்க, சாயனை கோயிலருச்சனை கொள்ள, சதுக்கங்கள் பல பட விழைத்த வப்பாண்டித்தலைவன் நகரந் துறந்தோடத் தோள்வலி குன்றிய யாம் புரிவதென்னே! என்னே! புல னிழந்து நிற்கின்றனம்.

3-ம் யாழ். சொக்கலிங்கன்றான் அரியநாதன் பாற்புக்கு அழியாக்கவ்வைக்கிடனாயினன். அது நிற்க, மத்தளத்தை யிருபுறமு மறைதல் போல இச்சோழ பெருமானுக்கு அப்பக்கம் நாகமனும், இப்பக்கம் அரியநாதனுந் தாக்கும் போரில் அந்தோ! பாவம்! இவன் என் செய்வன்? தானை புறங்காட்டி அப்புறம் இப்புறம் இரிந்தோட, யாமும் பின் னிட்டோடி வந்தனம்.

சிங்கள. அங்கு! அதோ! அம்மை!

(பூந்தத்தையுள்ளே பிரவேசித்து)

பூந்த. எங்ஙனம் வந்தீர்? போர்க்களம் விட்டீர்! நுங்க டமையங்கன்றோ? போர்புரிந்தாயிற்றோ? ஏன்வந்தீர்?

1-ம் யாழ். போர் முடிந்ததாக வந்தேம்.

பூந்த. என்னே! நம்மிறைக்கு வெற்றியோ? நும்வீரம்நாட் டினீரோ?

2-ம் யாழ். எம்படைத்தலைவன் பழிப்படைய நேரலரோடு கலப்ப, யாமும் அன்னமிட்டானோடு பகைத்தல் அழகல்ல வெனத் தானையை விட்டுப் பிரிந்திவண் போந்தனம். இனியாமவன் சேர்கிலம். யாவரும் இந்நாட்டை விட்டு நம்முடைய நாடு சேருது மெனக்கருதினம்.

பூந்த. என்னை!

1-ம் யாழ். பூந்தத்தைக்குப் போர்வண்ணங்கூறாய்.

1-ம் யாழ். நங்காய்! போர்வண்ணங் கூறுவன், கேளாய்!

கதிரவன் உச்சஞ் சென்று சேர்ந்தான். யாம் சொக்கலிங்கன் படைக் கூற்றினின்று வெய்ய போர் விளைத்தனம். நாகமன் சேனையை யுற்ற பல வீரர்களுக்குக் கூற்றாய் நின்றனம். இருபடைக் கடலும் ஒன்றி, வெற்றியிங்ஙன் தோல்வி யிங்ஙன் என்று கண்டறிதல் வாளாக்கிடப்ப, எற்பாடுற்றது. அங்ஙனே ஒரு பெரும் படை எம் பின்னால் விளங்குற்றது. அப்படை அரியநாதன் படையாம். அன்னவர் காற்றினுங் கடுகப் போந்தார். எம்மே லெஃகெறிந்தனர். யாம் நாகமன் படையை வீட்டல் விலகி யொருசார் திரிந்து சிலவ ரிரிந்தோட, சிலவர் பரிந்து வீழ, சிலவர் கலங்கிச் சோரவுறுத்துப் போர் புரிந்தனம். சில் பொழுது எங்ஙனே போர்புரிந்தாம்? இங்ஙனே? அங்ஙனே? வீரசேகரச் சோழன் பாலோ? அரியநாதன் பாலோ? யாமறியேம்! சொக்கலிங்கன் என் செய்தான்? மற்றொருகால் நம்படை போர் சலித்தது போல் வாளாவசைந்து நின்றது. பின்னர், அந்தோ! அரியநாதனையே சேர்ந்தது. அங்ஙனம் விளைந்த போர், அம்ம! பெருங்கொடுமை! சோழன் என்செய்வான்? பாவம்! குபேரன் யானைப்படைதான் சற்று வலிந்து போருக்கிரங் கொண்டு பகைவர் குண்டுக் காற்றுவதாய் அங்குமிங்கும் பிளிரொலிகாட்டி வீரரையுருட்டியும், பரிமாவைத் துளைக்கரத்தான் மாட்டியும், துவசமீ வீட்டியும், தேரைச்சாய்த்தும், குபேரன் சொற்படி நின்றாடிப் பலருமெச்சப் போர் நடாத்தியது.

காலைப் பொழுதெல்லாம் வெற்றியே கண்டார்க்கு மாலைப் பொழுதெல்லாம் வெற்றியற்றதே! இன்னம் சொல்வதென்னை? அரிவை! இவ்வுரத்திற்பட்ட காயமெல்லாம் புகழை உகுத்தது! இன்னதோர் படைத்தலைவன் எம் படைத்தலைவனாக, யாமுஞ் சேவகஞ் செய்தனமே! எமது வாணாள் வீணாளல்லவோ? உண்மையுரைக்கப் புகுந்திடில், வீரசேகரனுக்குக் கூற்றுவன் கூற்றுவனல்லன். இந்நின்ற சொக்கலிங்கன் கூற்றுவன். அந்நின்ற வரியநாதன் கூற்றுவன். மற்றும் யாமல்லாத வீரரெல்லோருங் கூற்றுவர். அன்னவன் சோற்றை உண்டு நேற்றை யன்புடனிருப்போமென்றா ரெல்லோருங் கூற்றுவர். பின்றை நாள் வஞ்சங் கொடு இன்னே கொடுமை யிழைத்தாரெல்லோரும் பொல்லாத கூற்றுவரம்மே! சோழன்

இருபுறத்துச் சேனைகளோடு போர் புரிதலாற்றாது தடுமாறிப் பெருங்காலடித்து மோதப் பெரும் பௌவத்தே கூம்பொடிந்த நாவாய் போல அசைந்து சற்றே தூங்கினன். இவன் தாவச மற்று வீழ்தல் திண்ணமெனத் தோற்றிற்று. பிறகு சேனை புறங்காட்டத் தானைத்தலைவர் வீழ, யானைப் படையல்லோலப் பட்டோடக், கொய்யுளைப்பரிமா பொட்டென்று வீழ்ந்திறப் பக், காலாள் கவந்தமாய் நின்றாட, வீரசேகரன் தலையும் உடலி னின்று பிரிக்கப்பட்டு நாகமன் கொண்டாடப் போயதே! அரியநாதனும் தான் கொண்ட படையைப், பல்லியங் கடல் போல வாரவாரிப்ப, வீரர் துள்ளொலி விண்ணகஞ் சார, வெற்றித்திரு கொடிமீதாடச், செலுத்திச் சென்று நாகமனு டன் கலந்தனன். நாகமனும் அரியநாதனைத்தனது அகலந் தழுவினன். யாமுந் தோல்வியென்னும்பேயை மணந்து பழிப் புக் காளாய் வந்தனம். இவ்வண்ணமே போர் வண்ணமும் எம் வண்ணமும் காணாய்! நங்காய்!

பூந்த. அந்தோ! சோழன் வினை இஃதாயிற்றே?

நீர்வளம் பொருந்தி நெடிது நாள் வளர்ந்த சோழமண்டல மும், செந்தமிழ்த்தாய்க்குச் சிற்றிலாகவும், தடாதகைப்பி ராட்டியின் தொல்குலமன்னர் ஆணையிற்படிந்ததாயும், நம்ம வர்க்குப் புகலிடமாயதுமான கன்னிநாடும், இன்னே விஜய நகரத்தாரடிமைப் பட்டதோ! ஐயகோ! ஈசன் செயலிஃ தாய் முடிந்ததோ! யாமுங்கன்னி நாடொரீஇ ஈழம் விழைத லாயிற்றே!

சிங்க. போதும்! போதும்! வருத்தமென்ன?

பூந்த. மெய்யே! வருந்தல் வீணே! இவ்வெறுவெளியில் நிற்பார்க்குத் தீங்கு விளையும். யாரும் இல்லை நன்னுதாய், வம்மின்! அகம்புக்கு, ஈழஞ் செல்வா னுன்னுவாம்! மாலை நணுகிற்று. வெயிலவன் குடகடற்புக்கு மறைந்தனன். வம் மின்! வம்மின்!

களம்—முற்றிற்று.

அங்கம்—2, களங்கள்—4-5.

வெற்றி கொண்டபின் நாகமனும், அரியநாதனும், சந்திர சேகர பாண்டியனும், படைத்தலைவர்களும் இனிது வீற்றி

ருந்து உரையாடிக் கொண்டிருக்கச், சோழன் மனைவியாகிய கனகவல்லி துக்கமடைந்தவளாய்த்தனது அவலத்தன்மையைப் புலப்பிக் காட்டித் தன் கணவன் உடலைத்தரும்படி வேண்டினள். நாகமன் மிகுந்த கிருபையுடன் அவளுக்கு ஆரியப் படையூரையும், ஆயிரம் வேலிகளையும், அரிவையரிற்சிலரையும் ஜீவனத்திற்குத்தந்து, இன்னுரை கூறியனுப்பினன்.

அங்கம்—2, களம்—4.

இடம்—நாகமன் பாசறை. காலம்—மாலை.

(நாகமன், சேவப்ப நாயக்கன், சந்திரசேகர பாண்டியன், அரியநாதன், சோக்கலிங்கன், சதாசிவராய், கிருஷ்ணராய், வரதராய், ஜம்புராய், எடத்தராய், முதலானவர்கள் தம்தம் முறையே வீற்றிருக்க.)

(நேரிசை யாசிரியப்பா.)

நாகம. தோண்மையே துணையாத் துன்னலர்த் துடைத்துய
ராண்மையே பூண்ட வரிய நாத!
சென்னியும் யானுஞ் சேரக் களத்திற்
றுன்னிய வெம்போர் தொடங்கிய காலை,
வெற்றியுந் தோல்வியும் விளம்ப லரிதாய்ச்
சுற்றவெம் போர்வலி காட்டி நின்றனம்,
ஆயதோ ரமையத் தரும்படை யோடுநீ
காய்சினக் கோலா கலனுடன் பொருத
வண்ணமு மன்னவன் வான்படை யிரிந்துக
னெண்ணமுஞ் செயலு மிழந்து நிற்பக்
கண்டவன் றலையைக் கடிந்த வண்மையும்
மண்டல மாக வளவனை வளைந்து
கொண்ட வாறுங் கூறுக.

அரியநா. வேலோய்!
கண்டுடன் சென்று தரியலர் படையைச்
சாடினன், நமது தானை வீரருங்
கூடிக் கலந்து குண்டுக ளோச்சிப்
புரிந்த போரெழு புகைப்படாம் போர்ப்பக்
கரித்தவர் சாம்பிக் கலங்குங் காலையில்,
நம்முடை யனிக நாட்டிய வீர

மெம்மனோரா லியம்பற் பாலதோ ?
இடையிற் செலுத்திய விவுளி யாலவர்
படைக்கட லலைந்து பட்ட தன்மையைச்
சொல்லவும் பெறுமோ ? சோரியு நிணமு
மெல்லைக டோறு மிழிந்து படிந்திட,
வெருவியே சிலவர் விரைந்தோ டினர். பலர்
செருக்களத் தேயுடல் சிந்திநின் றார்கள்.
அன்னதோர் காலை யடியனுட் புகுந்து
துன்னி வெம்போர் தொடங்கிப் பகைவன்
றலையைத் தள்ளித் தானை புறந்தர
மலைந்துபுண் பட்ட மறவரை நிறுத்திச்
சேமப் படையிற் சிலவரைச் சேர்த்துப்
பாமக் கடல்போற் பரந்து நின்ற
சோழன் றானையைச் சூழ்ந்தனன் சூழ்ச்சியால்.—
ஈழத் தானைக் கிறைவன் இவன்காண்!
வளவன் சேகரன் வஞ்சனை யறிந்தோன்!
களத்தி லென்பாற் கலந்தனன், வழுதி
பிரிவாற் றாது பேதுறு மனத்தன் !
உரிய செய்கையன்! உள்ளந் தூயோன் !
இவனைப் போற்றுத விரும்புக மாமே !

(சோக்கலிங்கன் எழுந்துபணிய)

நாகம. எவனைப்போற்றுத விரும்புக மாமோ
அவனைப் போற்றுத லடியன் கடமை.
உவந்தன னமர்க ! வுயர்படைத் தலைவ !—
தவந்தனம் யாவும் தன்மன மடங்கித்
துன்ப மாதி தொடர்ந்த வேனும்
இன்பமா கக்கொண் டிருத்த லாகும் !—
மன்னவன் வழுதி வளநா டெழுந்து
துன்னுங் காலை, தொடர்ந்து சென்றவற்
குறுதுணை யாகிமற் றன்பதம் பெறுக.

சந்திர. குறுநிலம் புரக்குங் கொற்றவர் மகுட
கோடியாற் றேய்வுறுங் குறைகழல் வீர !
நீடிய புகழையே நிருபற் களிக்க
நின்ற தன்மையன் ! நேசமிக் குடையோன் !
குன்றாப் போர்வலி கொண்டவன் ! பாண்டியன்

செவ்விதிற் செங்கோல் செலுத்து நாளையில்,
தெவ்வ ரிரியச் சேவகஞ் செய்தனன்!
இனைய னன்றிமற் றேனைய ரியாருமென்
மனக்கினி யாரிலை; மதித்தனை யதுவே.

நாகம. காலை தொடங்கியான் கண்ட போரில்
தோலா நின்றுபோர் தொடுத்தனன் சோழன்;
பரிதி யுச்சம் படுபகல், அன்னவன்
விரிகதி ரொப்ப வெங்கணை செலுத்திப்
பொருத போரிடைப் புகுந்து, யானும்
விருது காட்டி விளங்கிய காலை
எற்பா டுற்றிட வெதிரிபா டுற்றான்;
மற்பா டுற்றதோள் வலந்துடித் திட்டதால்;
இதற்குக் காரிய மெண்ணி யிருந்தனன்,
அதற்குன் வரவே யாயதின் றறிந்தனன்!

(ஓரொற்றன் பிரவேசித்து)

ஒற்ற. தேய்மதி போலத் தெளிவிலா முகத்தாள்,
ஆய்மல ருகுத்த வருங்கொடி யன்னாள்,
தாவிய புகையாற் றைவர நின்றதோ
ரோவியப் பாவையென் றுரைக்கத் தக்காள்,
விழிவழிப் பெய்து விலகுநீர் வெள்ள
மொழுகமுன் றானைகொண் டொற்றி நின்றனள்,
விரிந்திடு குழலள், வெய்துயிர்ப் புடையள்,
பரிந்த வுரையுடன் படுகளம் நின்றனள்!
மெல்லியள் பாதம் வெதும்பிடப் பரலிடைப்
புல்லிட நின்றது! புவன மேங்குறும்!

நாகம. சோக முற்றதாச் சொன்ன
தோகையைக் காணத் தோழ ரெழுகவே.

முற்றிற்று.

அங்கம்—2, களம்—5.

இடம்—களத்தின் ஓர்சார். காலம்—மாலை.
(கனகவல்லி தலைசிதறுண்டுகிடந்த கணவனுடலைநோக்கி)

கனக விருத்தம்.

காவலனே யென்னருமைக் காதலனே கார்க்கடல்சூழ்

பூவலய மாண்ட புரந்தரனே பொன்றினையோ
பாவி யிழைத் திடுவிரதப் பலனிதுவாய் விளைந்ததுவோ
ஆவிதியே யென்றலையி லன்றமைத்த வாறிதுவோ (1)
தாட்டிக மாகத் தரியலர்முன் னின்ற செயற்
கேட்டே னிருந்தேன் கேடிலையென் றேபாண்டி
நாட்டாசை யாலே நடந்தவென தாருயிரைக்
காட்டீரோ வென்னாசைக் காதலனைக் காட்டீரோ (2)
மன்னா மனக்கினிய மணவாளா மனுகுலனே
யென்னாவி யேங்கி யிடர்க்கடலிற் பட்டுழலப்
பொன்னாடு செங்கோல் புரிவானீ போயினையோ
ஒன்னார் படைக்குனையா னுன்னைக் கொடுத்தேனே (3)

(வேறு.)

வடவை போலிரண்டு பாலும் வந்தனை வளைந்தசேனைக்
கடலிடை நின்ற வென்றி காண்கிலேன் களத்தில்வீர
ரிடையிலுன் னுடலைக்காண வெத்தவஞ் செய்தேனந்தோ
விடவரா நுங்குமந்த வெண்மதி யொத்தேனையோ (4)

(வேறு.)

பையரவின் பருமுடியும் பருப்பதமுங் கறையடியும்
பரிக்கு மிந்த
வையமதிக் குடைநிழலில் வளரவற நிற்பதிறை
மன்னருய்ப்பத்
தையலர்தங் கற்புயரத் தனியரசு புரிந்தபெருந்
தகையே செல்வம்
பொய்யெனவே துறந்தனையோ மறந்தெனையும்
புண்ணியனே புலம்ப வைத்தே. (5)

(நாகமன், அரியநாதன், சேவப்பநாயக்கன், சோக்கலிங்கன் முதலானவர்கள் உள்ளேபிரவேசிக்க)

கொன்றையணி பரமனுரை கூடல்பெற நினைத்ததுநற்
கொள்கையன்றென்
றென்றலவே பலவறங்களுரைத்தேனை யிகழ்ந்தனைபோர்க்
கொருப்பட்டாயே
அன்று தானுணர்ந்திலையே யாக்கைதலைவேறாக
வமைந்து நின்ற
வின்று தானறிந்தனையோ வென்னுரையும் பொன்
னுரையா விருந்தவாறே. (6)

பத்திரிகைவரவு

விநோதவிசித்திரப்பத்திரிகை:- இது சென்னையில் வாரம் ஒரு முறை பிரசுரிக்கப்படும் சமாசாரப்பத்திரிகை. மாணாக்கர்கள், வைத்தியர்கள், கைத்தொழிலாளிகள், யந்திரவேலைக்காரர்கள், முதலானவர்களுக்குப் பயன்படும்படியாகப் பலவிஷயங்களை வேடிக்கையாக எடுத்துக் கூறுகின்றது.

சுதேசி:- இது சென்னையில் வாரம் இருமுறை பிரசுரிக்கப் பட்டுவரும் ஓர் சமாசாரப்பத்திரிகை. இதன் பத்திராதிபர் மகா-ா-ா-ஸ்ரீ ஏ. சங்கரலிங்கம்பிள்ளை அவர்கள், பீ. ஏ. ஆங்கிலப் பத்திரிகையான "ஸ்டாண்டர்ட்" மானேஜர் அவர்களாலேயே நிர்வஹித்து வரப்பெற்றது. இது சிறந்த பத்திரிகைகளுள் ஒன்று. தமிழ்நாட்டார் ராஜரீக விஷயங்களைச் செவ்வையாய் அறிந்துகொள்ளவேண்டுமானால் இப்பத்திரிகையை வரவழைத்துக்கொள்ளலாம். வருஷ சந்தா 5 ரூபாதான்.

ஞானபோதினி:- இது ஓர் அரிய மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. இதன் பத்திராதிபர் மகா-ா-ா-ஸ்ரீ எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை அவர்கள், பீ. ஏ. தமிழ்நாட்டோர் யாவருக்கும் மிகுந்த நன்மையைப் பயக்கத் தக்கது. இது சென்னை "லிடரரிபூரோ" என்ற ஒரு சங்கத்தின் அங்கமாகும். ஷை சங்கத்தைப்பற்றி வேறொரு இடத்தில் கூறுவோம்.

விவேகபாநு:- இது மதுரையிலிருந்து மாதந்தோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை. இப்பத்திரிகை தமிழுலகுக்கு இன்றியமையாதது. மகா-ா-ா-ஸ்ரீ எம். ஆர். கந்தசாமிக் கவிராயர் அவர்களும், மகா-ா-ா-ஸ்ரீ எஸ். சாமிநாதய்யர் அவர்களும் தமிழ்நாட்டின் அபிமானத்தால் தூண்டப் பட்டுச் செய்துவரும் பெருமுயற்சி நன்கு வியக்கற்பாலது! பத்திரிகையின் அருமையைப்பற்றி எவ்வளவு கூறினாலும் தகும்.

இந்துநேசன், தென்னிந்தியா வர்த்தமானி:- இவை எமது பார்வைக்கு வழக்கப்படி அனுப்பப்பட்டு வருகின்றன. இப்பத்திரிகைகளின் பத்திராதிபர்களுக்கு நாம் நன்றியறிதலைச் செலுத்துகின்றோம்.

ஸ்ரீ வாணீவிலாஸின்:—இந்தப்பத்திரிகையின் முதலாவது சஞ்சிகையைப் பத்திராதிபர் எமது பார்வைக்கு அனுப்பியதற்காக அவருக்கு மிகுந்த வந்தனமளிக்கின்றோம். தென்னிந்தியாவில் வெளியாகி, நமது கண்ணுக்குப் புலப்பட்ட பல பத்திரிகைகளுள், வெளித்தோற்றத்தில் இப்பத்திரிகைக்கு இணையாக மற்றோர் பத்திரிகையைச் சொல்லமுடியாது. உயர்ந்த காகிதத்தில் நன்றாய் அச்சிடப்பட்டிருக்கிறது. மேலட்டையின் வனப்பும், இடையிடையே சமயோசிதமாய்ப் பொருத்தியிருக்கின்ற படங்களின் உண்மையான தோற்றமும், இப்பத்திரிகைக்கு மிகுந்த சிறப்பைத்தருகின்றன. வானசாஸ்திரப்படங்களைச் செய்த கம்மியன் மிகவும் புத்திசாலி. ஸ்ரீங்கேரி ஸ்வாமிகளின் படமும், இந்தியா சக்கிரவர்த்தியின் படமும் இச்சஞ்சிகையில் வெளியாயிருக்கின்றன. இவ்விதமாய் ஒவ்வொரு சஞ்சிகையிலும் படங்கள் வந்துகொண்டேயிருக்குமாயின், இப்பத்திரிகைக்கு ஏற்பட்டிருக்கும் வருஷசந்தா மிகவும் சொற்பமென்றே சொல்லத்தகும். இச்சஞ்சிகை நூறுபக்கங்கள் கொண்டது. மேலும் இப்பத்திரிகையில் உள்ளடங்கி யிருக்கின்ற விஷயங்களும் மிகவும் சிறந்தன. "வான சாஸ்திரம்" என்ற விஷயம் சாஸ்திர சம்பந்தமானது. மிகவும் அறிவைப் பயக்கத்தக்கது. செம்மையாய் இனிய நடையில் எழுதப்பட்டுள்ளது. "ஸ்ரீமத் சங்கராசாரியார் சரித்திரம்" மிகவும் தெளிவாக இனிமையான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. "ஆத்ம வித்தியா விலாஸம்" ஓர் சிறந்த வியாஸம். "புத்தர் காலத்திய தமிழ்" என்ற தலைப்பின்கீழ் தமிழாராய்ச்சி சிறிதளவுள்ள ஓர் வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது. "வஸந்தஸேனை" யும் "விப்ரம விஹாஸ" மும் நாடகங்கள். பிந்தியது "ஷேக்ஸ்பியர்" செய்த "காமடி ஆப் எரர்ஸ்" என்ற நாடகத்தின் கருத்தையே கொண்டது. "ஒரு பத்திராசிரியரின் விடுமுறை" யும், "வித்யுன்மாலை" யும், மனதிற்குக் களிப்பையுண்டாக்கும் தமிழ் நாவல்கள். "முடிச்சூட்டு மாலை" யும் "தெய்வங்கொள்கையும்ஸன்மார்க்கமும்" என்னும் விஷயங்களும் அதிலடங்கியுள்ளன.